பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 30 சனிக்கிழமை 14.01.2023 கதிர் 320

## யாழில் வீடு உடைத்து 12 பவுண் தாலி திருட்டு

யாழ்., கொல்லன்கலட்டியில் வீட்டிலிருந்தவர்கள் வெளியில் சென்றிருந்த சமயம் 12 பவுண் தாலிக்கொடி திருடப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்தவர்கள் வெளியில் சென்றிருந்த போது, பின்கதவை உடைத்து உள்ளே நுழைந்து பிரத்தியேகமாக வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்த தாலிக்கொடியைத்

2

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக 5 கட்சிகள் தங்களைப் பிரகடனம்

## யாழில் இன்று புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய 5 தமிழ்க் கட்சிகளும் இணைந்து புதிய கூட்டணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் இன்று கைச்சாத்திட்டுள்ளன. 5 தமிழ்க் கட்சிகளும் 'ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட் டணி' எனும் பெயரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தங்களைப் பிரகடனப்படுத்தியுள்ளன.

8



## யாழ். மாவட்ட போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் கூட்டம்



யாழ்ப்பாணம் மாவட்ட போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் விசேட கூட்டம் சாவகச்சேரியில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட தலைவர் ஈஸ்வரன் தலைமையில், சாவகச்சேரி நலன்புரி மண்டபத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

அதன்போது, வறுமைக்குட்பட்ட போராளிகளுக்குத் தைப்பொங்கல் செலவாக 30 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நகர சபையின் தவிசாளர், உப தவிசாளர், மதகுருமார்,

2

## யார் தமிழ்க் கூட்டமைப்பினர்? தமிழ் மக்களே தீர்மானிப்பர்!

### சுமந்திரன் திட்டவட்டம்



கொழும்பு,ஜனவரி15

"யார் தமிழ் கூட்டமைப்பினர் என்பதை தமிழ் மக்களே தீர்மானிப்பர். அதற்கு நீண்ட காலம் காத்திருக்கத் தேவையில்லை. இந்த உள்ளூராட்சித் தேர்தலிலேயே அது தெரியும்.

– இவ்வாறு கூறியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

2

## சர்வதேச சமூகம் விரும்பும் தலைமைத்துவமே தேவை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



நாட்டை மீட்பதற்கு பணத்தை அச்சடித்தல் மட்டும் போதாது. சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை பெறக்கூடிய தலைமைத்துவம் தேவை.

–இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் 70 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் ஒன்று தமனல்வில மத்திய கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2

## சிக்கிய 46 இலங்கையரையும் திருப்பி அனுப்பியது பிரான்ஸ்

(ந.லோகதயாளன்)

பிரான்ஸ் – ரீயூனியன் தீவுக் குள் நுழைய முயன்ற 46 இலங்கைப் பிரஜைகள் விமானம் மூலம் நாட்டுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையர்கள் 46 பேரும் கடல் மார்க்கமாகப் பிரான்ஸ் நாட்டின் ரீயூனியன் தீவுக்குச் சட்டவிரோதமாக உட்பிரவேசிக்க முயன்ற போது கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் 2022 டிசம்பர்

2

## யாழில் வாள் முனையில் மோ.சைக்கிள் வழிப்பறி



யாழ்ப்பாணம், இருபாலைப் பகுதியில் வாள் முனையில்மோட்டார்சைக்கிள் ஒன்று வழிப்பறி செய்யப்பட்டுள்ளது என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இருபாலை, டச்சு வீதியில் நேற்றிரவு மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த நபரை , இருபாலைப் பகுதியில், இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் நின்ற நால்வர் அடங்கிய

2

## மைத்திரி மீது குற்றவியல் வழக்கு

### கத்தோலிக்கத் திருச்சபை கோரிக்கை



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோருக்கு எதிராக குற்றவியல் நடைமுறையின் கீழ் வழக்குத் தொடருமாறு கத்தோலிக்கத் திருச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் தலைமையகப் பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன மற்றும் சிசிர மெண்டிஸ் ஆகியோர் மீது குற்றவியல் நடைமுறைகளின்கீழ்வழக்குத்தொடரப்படவேண்டுமென திருச்சபை குறிப்பிட்டுள்ளது.

2

## சர்வதேச........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இளைஞர்கள் அரசியல்வாதிகளின் காலடியில் செல்லும் கலாசாரமும் அடிமைத்தனமும் ஒழிக்கப்பட வேண்டும். இளைஞர்கள் அரசியல்வாதிகளின் அடிமைகளாக மாறக் கூடாது.

நாட்டில் இளைஞர்கள் முன்னேறுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கு-வதும் வாய்ப்புகள் நிறைந்த தேசத்தை உருவாக்குவதுமே அரசியல்வாதிகள் செய்ய வேண்டிய பணியாக அமைய வேண்டும்.

74 வருடங்களாக நாட்டுக்கு வேலை செய்வதற்கு அரசு ஒன்றே தேவை என்ற கருத்தோட்ட பழக்கம் இருந்தது. கடந்த காலங்களில் இருந்த எதிர்க்கட்சிகள் மக்களுக்குச் சேவை செய்யாமல் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முயல்வதையே செய்து வந்தன. இந்தப் போக்கை மாற்றி புதிய பிரவேசத்தை நான் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியினர் நிலைப்படுத்தியுள்ளனர்.

இதுவரை,70 பஸ்கள் பாடசாலைக் களுக்கு வழங்கப்பட்டுள் ளன. இதற்கு 339.2 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது. மூச்சுத் திட்டத்தின் மூலம் 56 மருத்துவமனைகளுக்கு 1,719 இலட்சம் ரூபா மதிப்பிலான உபகரணங்கள் வழங்கப்பட்டன. அதிகாரம் இல்லாத போதும் கூட மக்களுக்காக இவ்வளவு பெரிய தொகையை தற்போதைய எதிர்க்கட் சியே செலவிட்டது.

ஜனாதிபதி பதவியோ,பிரதமர் பதவியோ அல்லது அமைச்சுப் பதவியோ கிடைக்காமலே இவை அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன.

இத்தனை பணிகளையும் செய்யும் போதும் பல்வேறு நபர்கள் பலவிதமாக விமர்சித்தாலும் அந்த விமர்சனங்களால் நாடு அபிவிருத்தியடையாது.

தற்போதைய சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு பணத்தை அச்சடித்தல் மட்டும் போதாது. சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை பெறக்கூடிய தலைமைத்துவம் தேவை. எதிர்மறை மற்றும் பிற்போக்குத்தன எண்ணப் போக்குகளிலிருந்து விடுபட்டு நேர்த்தியான சிந்தனை மூலம் நாட்டை மீட்டெடுக்க புதிய வேலைத்திட்டம் தேவை - என்றார்.

## சிக்கிய........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

02 ஆம் திகதி நீர்கொழும்பில் இருந்து IMUL-A-0559 CHW இலக்கப்பல நாள் மீன்பிடி இழுவைப் படகில் புறப்பட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்டுத் திருப்பியனுப்பப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, சிலாபம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்என்றும்தெரிவிக்கப்படுகின்றது.

நாடு திரும்பிய 46 பேரும் சட்ட நடவடிக்கைகளுக்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மைத்திரி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்நீதிமன்றத்தால்பரிந்துரைக்கப்பட்ட இழப்பீடுகளில் நாங்கள் அதிக கவனம் செலுத்த மாட்டோம், எனினும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக முழு உண்மையைக் கண்டறியும் எங்கள் முயற்சிகளைத் தொடருவோம். இந்தத் தாக்குதலின் பின்னணியில் சதி இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தெரிவித்துள்ளார். எனவே, அனைத்தையும் வெளிக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை நாங்கள்தொடர்வோம்-என்றுகொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

## யாழில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருடிச் சென்றுள்ளனர். வீட்டார் திரும்பி வந்தபோது, கதவு உடைக்கப்பட்டிருந்தமையை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

உள்ளே சென்று பார்த்தபோது தாலிக்கொடி திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## யாழ்.மாவட்ட........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓய்வுபெற்ற அதிபர் அருந்தவபாலன், வவுனியா மாவட்ட போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் அரவிந்தன் , கிளிநொச்சி மாவட்ட போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் அலன், போராளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## யாழில்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவொன்று, வாளைக் காட்டி , வீதியில் பயணித்தவரின் மோட்டார் சைக்கிளைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யார்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோ, புளொட் கட்சிகள் மேலும் மூன்று கட்சிகளைச் சேர்த்துக் கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றும் இலங்கை தமிழரசு தன்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி விட்டது என்றும் ஒருதலைப்பட்சமாக அறிவித்திருக்கின்றமை குறித்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடைசியாகக் கொழும்பில் சம்பந்தன் ஐயாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டமைப்பின் பங்காளி கட்சி கூட்டத்தில் வரும் உள்ளூராட்சி தேர்தலை மூன்று கட்சிகளும் தத்தம் விருப்பப்படி தனித்தனியாகவோ, தமக்குள் கூட்டாகவோ எதிர்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரை ஒரு கட்சியும் பயன்படுத்தக் கூடாது என சம்பந்தன் ஐயாவிடம் ஓர் உறுதிமொழி வழங்கப்பட்டது.

அதனை ரெலோ, புளொட் கட்சிகள் இப்போது மீறி உள்ளன. அதற்காக நாம் அவர்களுடன் மோதுவதோ,,அவ்விடயத்தை சவாலுக்கு உள்ளாக்கவோ போவதில்லை. நன்றாக அந்தப் பெயர்களைப் பயன்படுத்தட்டும்.

இப்படித்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரையும், சின்னத்தையும்முடக்கிஆனந்தசங்கரி கொண்டு போன போது, அதனை அப்படியே சும்மா விட்டு விடுங்கள், சட்டச்சவாலுக்குக் கூட உட்படுத்த வேண்டாம்என்று உறுதியாக கூறினார் சம்பந்தன்.

சும்மா விடுங்கள் என்றார் சம்பந்தன். சங்கரியையும் அவரது கட்சியையும் மக்கள் சும்மா விட்டு விட்டார்கள்.

தமிழ்க்கூட்டமைப்புபெயர்விடயத்திலும் சும்மா விட வேண்டியதுதான். தமிழ்மக்கள்பார்த்துக்கொள்வார்கள்.- என்றார் சுமந்திரன்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆறு மாத ஆட்சிச் சாதனை

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகி அரை வருடம் – ஆறு மாதங்கள் – உருண்டோடி விட்டன.

பொருளாதாரப் பெருவீழ்ச்சியைச் சந்தித்திருக்கும் நாட்டுக்கு அதிலிருந்து மீட்சி கிட்டுவதான எந்தச் சாதக அம்சமும் தென்படவில்லை. ஆக, பணவீக்கம் எகிறும் வேகம் மட்டுமே சற்றுக் குறைந்திருக்கின்றது. அவ்வளவுதான். அதைவிட உருப்படியாக எதுவும் நடக்கவில்லை.

'அறகலய' என்ற மக்கள் எழுச்சிப் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்கியமையைத் தவிர, வேறு எதனையும் ரணில் விக்ரமசிங்கவின் அரசு உருப்படியாகச் சாதித்ததாகத் தெரியவில்லை. 'அறகலய' போராட்டம் கூட, அடங்கியதாகத் தெரியவில்லை. நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது. ரணில் ஆட்சிப்பீடத்தின் கொள்கைகள், போக்குகள் பொருளாதாரப் பெருவீழ்ச்சியிலிருந்து மீட்சி பெற்றுத் தராமல், மக்களின் நெருக்கடிகள் நீண்டு கொண்டு போகுமானால், அடங்கிக் கிடக்கும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் மீண்டும் கனன்று எழத் தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது தற்காலிக அமைச்சரவையை அமைப்பதாக அறிவித்த ரணில் விக்ரமசிங்க, விரைவில் புது அமைச்சரவை பதவியேற்கும் என்றார். ஆனால், ஆறு மாதங்கள் கடந்தும் அது நடக்கவில்லை. புதிய அமைச்சரவையை அமைக்கப் போனால் அரசியல் குழப்பங்கள் ஏதும் வந்து விடும் என்ற அச்சத்தில், அதனை நாளை, நாளை என்று 'பிள்ளையார் கலியாணம் போல' தள்ளிப் போட்டு வருகிறார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போனானாம்' என்ற கதையாக, அமைச்சரவையைச் சீரமைக்கும் நடவடிக்கையை எடுக்கத் திராணியற்ற ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டுத் தரப் போகின்றார் என்று நம்புவது அர்த்தமற்றது.

இதற்கிடையில், 'சர்வதேச நாணயநிதியத்தின் நிதி உதவி கிடைப்பது தாமதமாவதன் காரணமாக இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடிகள் அதிகரிக்கின்றன' – என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க சர்வதேச நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்டுள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்படுகின்ற நிதிஉதவியை பெற்றுக்கொள்வது தாமதமாவதன் காரணமாக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ரணிலின் அரசின் இயலாமையை ஒப்புக் கொள்ளும் குறிகாட்டி இது.

# மரணம் வரையிலும் நாட்டின் அரசியலை சம்பந்தன் ஊகித்துக் கொள்ளவில்லை!

## கவலைப்படுகின்றார் பிள்ளையான்



மரணம் வரையிலும் சம்பந்தன் ஐயா போன்றவர்கள் இலங்கையின் அரசியலை ஊகித்துக்கொள்ளவில்லையென்பது மிகவும் கவலையான விடயம் என இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் பணிகள் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் நடைபெற்று வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை வெள்ளிக்கிழமை தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி மேற்கொண்டது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இந்த கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி தவிர்ந்த உள்ளூராட்சிமன்றங்களில் போட்டியிடவுள்ளதாக இதன்போது இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர் –

பிராந்திய மட்டத்தில் அரசியல் கட்டமைப்புகள் பலப்படுத்தப்படவேண்டும். அந்த அடிப்படையில் கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிதைவும் கிழக்கு சார்ந்த ஒரு கூட்டமைப்புக்கான சாத்தியத்தை அதிகரித்துள்ளது.

அந்த அடிப்படையில் கிழக்கு மாகாணத்தை மையப்படுத்திய அனைவரையும். போராட்ட அமைப்புகளிலிருந்து வெளியேறியவர்கள், போராட்டத்தின் வலிதெரிந்த அமைப்புகளோடும் நாங்கள் பேச்சுகளை நடத்தியிருக்கின்றோம்.

இருந்தபோதிலும் அவர்கள் இன்னமும் போலித்தேசியவாதிகளை நம்பியிருக்கின்றார்கள். அது தோல்வியில்முடியும் என நம்புகின்றேன். இருந்தபோதிலும் கிழக்கு மாகாணத்தில் ஒரு கூட்டமைப்பை உருவாக்குவதற்கு நாங்கள் கலந்துபேசி வருகின்றோம்.

இந்த நாட்டின் அரசியலில் இவ்வளவு காலமும் சீரழிந்து சின்னாபின்னமாகி பொருளாதார இழப்புகளுக்குக் காரணமாகயிருந்தவர்கள் கொள்கையை வகுத்தவர்கள், தாங்கள் மட்டும் என்ற எண்ணக்கருக்களை உருவாக்கிய யாழ்ப்பாணத்தில் பிறந்த சில உயர் தரத்தவர்கள் தாங்கள் மாத்திரந்தான் என்ற எண்ணக்கருவைக் கொண்டவர்களைத்தான் மேட்டுக்குடிகள் என்று சொல்கின்றோமேயொளியவடபகுதியிலிருக்கும் எல்லோரையும்சொல்லவில்லை.

அவர்கள் இப்போதும் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு பலமாக போராடிக்கொண்டிருக்கின்றார்கள். அதன் தீர்மானத்தின் ஒரு பகுதியே இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதைந்துள்ளதாகும். அந்த மேட்டுக்குடியின் சித்தாந்தத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளே இதற்குக் காரணம்.

சுமந்திரனை நாங்கள் சட்டத்தரணியென்றே நினைத்தோம். ஆனால் கணக்கு வாத்தியார் போல கணக்கு படிப்பிக்கின்றார் தொழில்நுட்பம் தொடர்பாக.அவருக்குத்தான் அந்த கணக்கு தெரியும்.எனக்கு தெரியாது.

இன்று வடக்கு கிழக்கு இணைப்பு மாகாணசபை தொடர்பில் பேசும் தமிழ்த் தேசியகூட்டமைப்பின்அன்றையநிலைப்பாட்டை யாரும்மறந்துவிடக்கூடாது. 2008ஆம்ஆண்டு நாங்கள் தேர்தலில் போட்டியிடமாட்டோம் கொள்கை ரீதியான முரண்பாடு என பல விமர்சனங்களை செய்தார்கள்.

2008 ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக வந்தபோது என்னை வரவிடாமல் செய்வதற்கு முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆதரவு வழங்கினார்கள். இரண்டாவது முறைதவிறவிட்டு அடுத்தத் தடவை முதலைமைச்சர் பதவியை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எடுக்கவேண்டும் என்று சம்பந்தர் ஐயாவிடம் சென்று கதைத்தோம். கிழக்கில் போராடியவர்கள் பல இழப்புகளைசந்தித்தவர்கள்என்றஅடிப்படையில் கிழக்கில்தமிழ்தேசிய கூட்டமைப்பை சேர்ந்தவர் முதலமைச்சராக வரவேண்டும் என்பதற்காக எனது முழு ஆதரவினையும் தருகின்றேன் எனசம்பந்தர்ஐயாவிடம்கூறியபோது அதனை உதாசீனம் செய்தார்.

அதனால் அமைச்சர் ஹாபீஸ் சொல்வது உண்மையில்லை.நாங்கள் சாதகமான விடயங்களை ஊகித்துக்கொள்கின்றோம். சம்பந்தன் ஐயா போன்ற தலைவர்கள் மரணம் வரையிலும் இலங்கையின் அரசியலை ஊகித்துக்கொள்ளவில்லையென்ற என்ற எனக்கு இன்னும் இருக்கின்றது.– எனத் தெரிவித்தார்.

# அனைவரையும் பொங்கவைப்போம் என்ற திட்டத்தில் தையிட்டியில் பொங்கல் பொதி!



கனடாவில் வசிக்கும் சமூக சேவையாளர்கள் திருபன், குகன், கருணாகரன் ஆகியோரின் நிதிப் பங்களிப்புடன் நேற்று (வெள்ளிக்கிழமை) தையிட்டி பகுதியில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தப் பொதிகளை வலி.காமம் வடக்கு பிரதேச சபையின் தையிட்டி பகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உறுப்பினர் ஐ.மயூரன் வழங்கிவைத்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# ஜப்பானுக்குப் பாதுகாப்பு அளிப்பதில் அமெ. உறுதி என்கிறார் ஜோ பைடன்

வொஷிங்டன், ஜன.14

அமெரிக்க அதிபர் ஜோ பைடனை வெள்ளை மாளிகையில் வைத்து ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா நேற்று நேரில் சந்தித்துப் பேசியுள்ளார் என அமெ. அதிபர் ஜோ பைடன் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

அமெரிக்க-ஜப்பான் கூட்டணியில் எங்கள் முதலீடு தேசிய பாதுகாப்பு முதல் பொருளாதார பிரச்சினைகளுக்கான பெரும் நிதித் தொகையை அளிக்கிறது. இது மேலும் இது பல ஆண்டுகளாக தொடரும். மேலும், ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடா, அமெரிக்காவுடன் உறுதியான நண்பராக இருந்து வருகிறார்.

அவருடன் அமர்ந்து, இந்தோ-பசிபிக் ஆகிய இரு நாடுகளுக்கும் அமைதி, பாதுகாப்பு மற்றும் செழிப்பை மேம்படுத்த நாம் எவ்வாறு இணைந்து செயல்படுகிறோம் என்பதைப் பற்றி விவாதிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நாங்கள் எங்கள் இராணுவ கூட்டணிகளை நவீனமயமாக்குகிறோம், பாதுகாப்பு செலவினங்களில் ஜப்பானின் வரலாற்று அதிகரிப்பு மற்றும் புதிய தேசிய பாதுகாப்பு மூலோபாயத்தை உருவாக்கு கிறோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள் ளது. இதனைத் தொடர்ந்து பிராந்திய பாதுகாப்புக்கான அமெரிக்கப் பணிகளுக்கு ஜப்பான் பிரதமர் கிஷிடா, ஜோ பைடனுக்கு நன்றி தெரிவித்தார். மேலும் ஜப்பானும் அமெரிக்காவும் தற்போது சமீபத்திய வரலாற்றில் மிகவும் சவாலான மற்றும் சிக்கலான பாதுகாப்பு சூழலை எதிர்கொள்கின்றன. டோக்கியோ தனது புதிய பாதுகாப்பு மூலோபாயத்தை கடந்த மாதம் வெளியிட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

# மற்றொரு கறுப்பின வாலிபர் கைதின் போது உயிரிழப்பு

## அமெ. லொஸ் ஏஞ்சல்ஸில் சம்பவம்






வொஷிங்டன், ஜன.14

அமெரிக்காவில் கடந்த 2020 ஆம் ஆண்டு கைது நடவடிக்கையின் போது ஜோர்ஜ் பிளாய்ட் என்ற கறுப்பினத்தை சேர்ந்தவரை பொலிஸார் தரையில் தள்ளி அவரது கழுத்தில் கால் முட்டியை வைத்து பலமாக அழுத்தியதில் அவர் மூச்சு திணறல் ஏற்பட்டுப் பரிதாபமாக இறந்தார். இதையடுத்து ஜோர்ஜ் பிளாய்ட்டின் மரணத்துக்கு நீதி கேட்டு அமெரிக்கா முழுவதும் பெரும் போராட்டம் வெடித்தது.

இனவெறிக்கு எதிரான 'பிளாஸ் லைவ்ஸ் மேட்டர்' என்கிற தன்னார்வ அமைப்பு இந்தப் போராட்டங்களை முன்னெடுத்தது.

இந்த நிலையில், ஜோர்ஜ் பிளாய்ட்டுக்கு நேர்ந்தது போலவே அமெரிக்காவில் மீண்டும் ஒரு சம்பவம் நிகழ்ந்துள்ளது. அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரை சேர்ந்த கீனன் ஆண்டர்சன் என்கின்ற கறுப்பினத்தவரான இவர் 'பிளாஸ் லைவ்ஸ் மேட்டர்' அமைப்பின் இணை நிறுவனரான பாட்ரிஸ் கல்லர்சின் ஒன்றுவிட்ட சகோதரர் ஆவார். சாலை விபத்து தொடர்பான புகாரில் இவரைப் பொலிஸார் கைது செய்ய முயன்றனர். அதற்கு அவர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் பொலிஸ் அதிகாரி அவரை தரையில் தள்ளி கழுத்தில் கை முட்டியை வைத்து அழுத்தினார்.

அப்போது ஆண்டர்சன், உதவி, உதவி, என்னை ஜார்ஜ் பிளாய்ட் போல கொலை செய்ய பார்க்கிறார்கள் என அலறினார். அப்போது அருகில் இருந்த மற்றொரு பொலிஸ் அதிகாரி ஆண்டர்சன் மீது மின்சாரத்தை பாய்ச்சும் துப்பாக்கியை 30 வினாடிகள் தொடர்ந்து பயன்படுத்தினார்.

இதில் சுயநினைவை இழந்த அவர் அருகில் உள்ள வைத்தியசாலையில், சிகிச்சைக்கு சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் அமெரிக்காவில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளதாகக் கூறப்படுகின்றது.



# பிலிப்பைன்ஸில் இறைச்சி விலையை விட உயர்ந்த வெங்காயத்தின் விலை!

பிலிப்பைன்ஸ், ஜன.14

பிலிப்பைன்ஸ் நாட்டில் மக்களின் முக்கிய காய்கறிகளில் ஒன்றான வெங்காயம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறதுடன், கிலோவுக்கு 600 பிசோஸ் என்ற விலையில் விற்கப்படுகிறது. இது கோழி இறைச்சியை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு விலை அதிகம் எனவும், பன்றி இறைச்சி அல்லது மாட்டிறைச்சியை விட 25-50 சதவீதம் அதிகம் எனவும் கூறப்படுகின்றது.

ஒரு கிலோ வெங்காயம் வாங்கவேண்டுமானால் ஒரு நாள் வேலைக்கான பிலிப்பைன்ஸின் குறைந்தபட்ச ஊதியத்தை விட அதிகம் செலவு செய்ய வேண்டி உள்ளது. உள்நாட்டு உற்பத்தி, விநியோகம் குறைந்து வருவதாலும், அதிகரித்து வரும் செலவுகளைக் கட்டுப்படுத்தவும் மார்ச் மாதத்திற்குள் சுமார் 22,000 டன் வெங்காயத்தை இறக்குமதி செய்ய வேண்டும் என வேளாண் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ரஷ்யா - உக்ரைன் போர், விநியோகச் சங்கிலியில் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் தீவிர காலநிலை மாற்றம் உள்ளிட்ட பல காரணங்களால் உலகளாவிய பணவீக்கம் அதிகரித்து, உலகளவில் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கின்றன. இதன்தாக்கம் பிலிப்பைன்ஸிலும் எதிரொலித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# போக்குவரத்து ஊழியர் வேலை நிறுத்தம் பிரிட்டனில் தொடர்வதால் மக்கள் சிரமம்

லண்டன், ஜன.14

இங்கிலாந்தில் போக்குவரத்து தொழிலாளர்களின் அமைப்புகள் சார்பில் ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தப் போராட்டம் நடந்து வருகிறது. இதன் காரணமாக இங்கிலாந்தில் 5 இல் ஒரு பங்கு ரயில்கள் மட்டுமே இயங்கி வருவதால், பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

குறிப்பாக ஸ்கொட்லாந்து, வேல்ஸ், இங்கிலாந்தின் கிராமப் பகுதிகள் பலவற்றிலும் ரயில் சேவை முடங்கியுள்ளது. அதே சமயம் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில் நியாயமான உடன்பாட்டை எட்ட முடியாததால், தங்கள் போராட்டத்தை தொடர உள்ளனர் என தொழிற்சங்கங்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசு தங்களது கோரிக்கைகளுக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என்றும், இல்லாவிடில் ஜனவரி மாத கடைசியில் வேல்ஸ் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பணிபுரியும் 2,600 அம்புலன்ஸ் ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் எனவும் தொழிற்சங்க அமைப்பினர்தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# இந்தியா – சீனா வர்த்தகம் கடந்த வருடத்தில் ரூ.11 லட்சத்து 15 ஆயிரம் கோடியாக உயர்வு




பீஜிங், ஜன.14

இந்திய – சீனப் படைகள் இடையே லடாக் எல்லையில் மோதல் நடைபெற்றதுடன், இன்னும் இரு நாட்டு படைகளும் முழுமையாக வெளியேறாமையால், அசல் எல்லைக் கோடு பகுதியில் பதற்றம் நிலவி வருகிறது. இதை மீறி, கடந்த ஆண்டு இரு நாடுகளிடை யிலான வர்த்தகம் அதிகரித்து இருப்பது தெரிய வந்துள்ளது.

சீன சுங்கத்துறை வெளியிட்ட புள்ளிவிவரத்தில் இத்தகவல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

கடந்த 2021 ஆம் ஆண்டில், இந்தியா – சீனா இடையிலான வர்த்தகம் ரூ.10 லட்சத்து 25 ஆயிரம் கோடியாக இருந்தது. இந்தநிலையில், 2022 ஆம் ஆண்டில், இருநாட்டு வர்த்தகம் ரூ.11லட்சத்து 15 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது.

இது முன்எப்போதும் இல்லாத அளவாகும். இதன்மூலம் ஒரே ஆண்டில் வர்த்தகம் 8.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

**பற்றாக்குறை**

கடந்த ஆண்டு இந்தியாவுக்கு சீனா மேற்கொண்ட ஏற்றுமதி ரூ.9 லட்சத்து 71 ஆயிரத்து 700 கோடியாக உயர்ந்துள்ளது. இது முந்தைய ஆண்டை விட 21.7 சதவீதம் அதிகம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இந்தியாவிடம் இருந்து சீனா மேற்கொண்ட இறக்குமதி ரூ.1 லட்சத்து 43 ஆயிரத்து 300 கோடியாக குறைந்துள்ளது.

இது முந்தைய ஆண்டை விட 37.9 சதவீதம் குறைவு. இந்தியா ஏற்றுமதி செய்ததை விட இறக்குமதி அதிக மாக செய்ததால், இந்தியா வர்த்தக பற்றாக்குறையை சந்தித்துள்ளது. இந்த வர்த்தக பற்றாக்குறை முதல் முறையாக 100 பில்லியன் டொலரை கடந்துள்ளது. வர்த்தக பற்றாக்குறை 101.02 பில்லியன் டிலர் ஆகும் எனக் கூறப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் 69 பில்லியன் டாலர் மட்டுமே வர்த்தகப் பற்றாக்குறையாக இருந்தது.

அத்துடன், 2015 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை இந்தியா சீனா இருதரப்பு வர்த்தகம் 75.30 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

உலக நாடுகள் இந்தியாவுடன் மட்டுமன்றி உலக நாடுகளுடனும் சீனாவின் வர்த்தகம் வளர்ந்துள்ளது. அமெரிக்கா, ஐரோப்பாவில் தேவைகள் குறைந்தபோதி லும், கொரோனா கட்டுப்பாடுகளால் ஙாங்காய் உள் ளிட்ட நகரங்களில் பொதுமுடக்கம் இருந்தபோதிலும் சீனாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதி 7 சதவீதம் அதி கரித்துள்ளது.

ஒட்டுமொத்த இறக்குமதி 1.1 சதவீதம் அதிகரித்துள்ளது. சீனாவின் வர்த்தக உபரி 877.6 பில்லியன் டொலராக உயர்ந்தது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## கொரோனாக் களப்பணியில் பலியான 14 பேரின் குடும்பங்களுக்குத் தலா ஒரு கோடி ரூபா உதவி!



புதுடெல்லி, ஜன.14

டெல்லியில் துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியா தலைமையில் அமைச்சர்கள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தக் கூட்டத்தில் பேசிய சிசோடியா –

டெல்லியில் கொரோனாப் பெருந்தொற்றின் போது, தங்களது உயிரைப்பற்றிக் கவனம் கொள்ளாமல் மனிதஇனம் மற்றும் சமூகம் பாதுகாக்கப்பட கொரோனா கால களப்பணியாளர்கள் சுயநலமின்றி பணியாற்றி, உயிர் தியாகம் செய்துள்ள னர். அவர்களின் குடும்பத்தி னருக்கு எந்தவொரு தொகை யும் இழப்பீடு வழங்கப்பட வில்லை. ஆனால், இந்த தொகையை பெறுவதன் வழியே அவர்கள் ஒரு கண்ணியமிக்க வாழ்வை வாழ்வதற்கான அர்த்தம் நிச்சயம் ஏற்படும்.

கொரோனா களப் பணியாளர்களின் குடும்பத்தி னரின் ஒவ்வொரு தேவைக்கும் அரசு துணையாக நிற்கும் என்று தெரிவித்து உள்ள அவர், இதன்படி கொரோனா பெருந்தொற்று பரவலின்போது, கொரோனா நோயாளிகள் மற்றும் சமூகத்திற்கு களப்பணியாற்றி உயிரிழந்த 14 பேரின் குடும்பத்தி னருக்கு தலா ரூ.1 கோடியை டெல்லி அரசு வழங்கும் என அறிவித்து உள்ளார்.




## உத்தரகாண்டில் கோவிலுக்குள் நுழைந்தமைக்காக தலித் வாலிபருக்குக் கொள்ளிக்கட்டையினால் சூடு

டேராடூன், ஜன.14

உத்தரகாண்ட் மாநிலத்தின் உத்தரகாசி மாவட்டத்தில் உள்ள சால்ரா கிராமத்தைச் சேர்ந்த 22 வயது தலித் வாலிபர் ஒருவர் கிராமத்தில் உள்ள கோவிலுக்குள் சாமி கும்பிடச் சென்றுள்ளார். அவர் கோவிலுக்குள் நுழைவதைப் பார்த்து ஆத்திரமடைந்த சிலர் அந்த வாலிபரை அடித்து உதைத்து, ஒரு தூணில் கட்டிவைத்தனர். பின்னர் இரவு முழுவதும் அவர் உடலில் கொள்ளிக்கட்டையால் சூடு வைத்து அந்தக் கும்பல் கொடுமைப்படுத்தியுள்ளனர்.

மறுநாள் காலை, அரசு ஆரம்ப சுகாதார மையத்தில் சிகிச்சை பெற்ற அந்த வாலிபர், பின்னர் மேல்சிகிச்சைக்காக மற்றொரு வைத்தியசாலைக்குஅனுப்பிவைக்கப்பட்டார். இது தொடர்பாக வாலிபர் அளித்த புகாரின் பேரில் எஸ்.சி., எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ், கிராமத்தினர் 5 பேர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். கோவிலுக்குள் நுழைந்த தலித் வாலிபருக்கு கொள்ளிக்கட்டையால் சூடு வைத்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தமிழ்நாடு முழுவதும் போகிப் பண்டிகை ஆரம்பம் காற்றுத்தரக் குறியீடு அதிகரிப்பு

சென்னை, ஜன.14

தமிழ்நாடு முழுவதும் நாளை பொங்கல் பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளதுடன், இன்று தமிழ்நாடு முழுவதும் போகி பண்டிகை வெகு விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர்.

ட்டில் உள்ள இயற்கை சார்ந்த தேவையில்லாப் பொருள்களை எரித்து, பழையன கழிதலும், புதி யன புகுதலும் என்ற அடிப்படையில் போகிப் பண்டிகைய்சிக் கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில் இந்த ஆண்டுக்கான போகிப் பண்டிகை தமிழ்நாடு முழுவதும் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. பண்டிகையை முன்னிட்டு மக்கள் பழைய பயனற்ற பொருள்களை எரித்துப் போகி பண்டிகையை வரவேற்று வரு கின்றனர்.

அதன் ஒரு பகுதியாக சென்னை, மயிலாப்பூரில் போகி கொண்டாடி தைத்திருநாளை வரவேற்கும் பொருட்டு பழைய பயனற்ற பொருடள்களை எரித்துப் போகி கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில் பழைய பொருள்களை எரிப் பதன் மூலம் சென்னையின் பல்வேறு பகுதிகளில் காற்று மாசு அதிகரித்து உள்ளது. சென்னையின் பல பகுதிகளில் கற்றின் தர குறியீடு 100 ஐ தாண் டியதுடன், மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது. காலை 6 மணி நிலவரப்படி ஆலந்தூர் 155, பெருங்குடி 113, கொடுங்கையூர் 94, மணலி 87, அரும்பாக்கம் 86, வேளச்சேரி 84, ராயபுரம் 82 என உள்ளது. பிளாஸ்டிக், டயர்களை எரிப்பதை தவிக்குமாறு மாசுக்கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் வேண்டு கோள் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக தம்பலகாமத்தில் கல்வி உதவிகள்







(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கல்வி மேம்பாட்டு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் தம்பலகாமம் கல்மெடியாவ சிங்கள வித்தியாலயம்,முள்ளிப்பொத்தானை புஹாரி மத்திய கல்லூரி,பாதிமா பாலிகா மகாவித்தியாலயம் மற்றும் பராசக்தி ஆரம்ப பிரிவு பாடசாலைகளில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், பாதணிகள், தளபாடங்கள்போன்றவற்றைகையளிக்கும்நிகழ்வுகளுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வகுப்பறைக் கட்டடங்களை கையளிக்கும் நிகழ்வுகள் நேற்று முன்தினம்இடம் பெற்றது.

கல்வியை மேம்படுத்தும் நோக்கில் பாடசாலை மட்டங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களை இணங்கண்டு இந்த உதவிகளை முஸ்லிம் எயிட் நிறுவனம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது

இந்த நிகழ்வில் வலயக் கல்வி பணிப்பாளர்கள், ஆசிரியர்கள்,பெற்றார்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

## வியாழேந்திரனின் சகோதரர் ஈ.பி.டி.பியில் இணைந்தார்!



இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் சகோதரர் மற்றும் ஜே.வி.பியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் நடேசன் சுந்தேரசேன் ஆகியோர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் நேற்று முந்தினம் வியாழக்கிழமை இணைந்துள்ளனர் என அக்கட்சியின் மட்டு. மாவட்ட அமைப்பாளர் தம்பிபிள்ளை சிவானந்தராஜா தெரிவித்தார்.

கட்சியில் இணைந்தவர்களை அறிமுகம் செய்யும் ஊடக சந்திப்பு மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தலைமையாகக் கொண்டு இயங்கிவரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வடக்கு கிழக்கில் வீணைச் சின்னத்தல் தேர்தலில் போட்டியிடும். இந்த நிலையில், ஜே.வி.பி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராகவும் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அந்தக் கட்சியின் முதன்மை வேட்பாளராகவும் களமிங்கிய ந.சுந்தேரேசன் அவரின் ஆதரவாளர்களுடன் ஈபி.டி.பி. கட்சியின் கொள்கையை ஏற்றுக் கொண்டு கட்சியில் இணைந்துள்ளார்.

“அவ்வாறே இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் சகோதரரான சதாசிவம் மயூரன் மற்றும் இராஜாங்க அமைச்சரின் ஆதரவாக செயற்பட்ட இளைஞர்கள், கடந்த தேர்தலில் போட்டியிட்டவர்கள், சுயேச்சைக் குழுக்களில் போட்டியிட்டவர்கள் கட்சியில் இணைந்துள்ளனர்.

எமது கட்சி ஒரு சுதந்திரமான கட்சி. அனைவரும் வந்து இணைந்து செயற்படலாம். தற்போது இளைஞர்கள் இணைந்து வருகின்றனர். மாவட்டத்திலுள்ள 10 உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடுவது டன் அனைத்து சபைகளையும் கைப்பற்றுவோம். – என்றார்.

## வாழைச்சேனை – கல்முனை மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு



வாழைச்சேனை மீனவர்களுக்கும் கல்முனை மீனவர்களுக்கும் இடையில், வாழைச்சேனை மீன்பிடித்துறைமுகத்திலும் கடற்கரைகளிலும் தொடரும் முரண்பாடுகளுக்கு தீர்வுகாணும் பேச்சுவார்த்தை, மாளிகைக்காடு அந்நூர் கலாசார மண்டபத்தில், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம் றியாஸின் ஒருங்கமைப்பில் இடம்பெற்றது.

உலமாக்கள், காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எஸ். ஜெகத், அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் டொக்டர் எஸ்.எம்.ஏ அஸீஸ், மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் எம்.எம் பௌசர், வாழைச்சேனை அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன உப தலைவரும், பொலிஸ் இன்ஸ்பெக்டருமான ஏ. அமீரலி மற்றும் மீனவர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இருதரப்பும் ஏற்றுக்கொள்ளும் வகையிலான தீர்வொன்று முன்வைக்கப்பட்டது.

படகு தரித்தல், மீன் விற்பனை, போதையொழிப்பு, மீனவர்களுடனான கொடுக்கல் – வாங்கல்கள், மீன் வியாபாரிகளுடனான உறவுகளைப் பேணுதல் போன்ற விடயங்களை ஆராய்ந்து, ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தொடர்பிலும், இருதரப்பினதும் அங்கத்துவத்துடன் கூடிய கண்காணிப்பு நிர்வாக குழுவை அமைப்பது தொடர்பிலும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

## வாகரை ஆதிவாசிகளுக்கு தைப்பொங்கல் பொருள்கள்



தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு வாகரை பிரதேசத்தில் வசிக்கும் ஆதிவாசி மக்களுக்கான பொங்கல் பொருள்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

ஆதிவாசி தலைவர் ந. வேலாயுதம், மட்டக்களப்பு சமூக சேவையாளரான வே.பிரபாகரனிடம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில், குஞ்சன்கல்குளம், இரண்டாம் கட்டை ஆகிய கிராமங்களில்வசிக்கும்சுமார்120குடும்பங்களுக்கான பொங்கல் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இலண்டனில் வசிக்கும் மார்கண்டு நேசன் குடும்பத்தினர் இதற்கான நிதி அனுசரனையை வழங்கியிருந்தார்கள்.



# பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் செயலாளர் நாயகம் – ஜனாதிபதி சந்திப்பு!

உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் செயலாளர் நாயகம் ஸ்டீபன் டுவிக் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சந்தித்து பேசியுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று (வெள்ளிக்கிழமை) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டார்.

# லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் விழா வாழ்வகத்தில்!

வடக்கு லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டிலான தைப்பொங்கல் விழா சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகத்தில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

லயன்ஸ் கழக சிரேஷ்ட உறுப்பினரும் கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபருமான லயன் ரஜீவன் ஐஸ்ரீஜயச்சந்திரமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த பொங்கல் நிகழ்வில், பிரதம விருந்தினராக மாவட்ட ஆளுநர் லயன் வைத்தியர் அனோமா விஜேசிங்கவும் சிறப்பு விருந்தினராக முதலாவது மாவட்ட உப ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம்.பீற்றரும் கௌரவ விருந்தினராக முன்னாள் ஆளுநர்களான லயன் எஸ்.எஸ்.தங்கராஜா, லயன் தேவா டி பீற்றர் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் சிற்றி, உரும்பிராய் வடக்கு, சுன்னாகம், யாழ்.ஒறியன்ற், யாழ்ப்பாணம் கோல்டன் ஸ்ரார், கிளிநொச்சி சிற்றி, முல்லைத்தீவு சிற்றி, வவுனியா சிற்றி, மானிப்பாய் சிற்றி, மயிலிட்டி கோல்டன் ஸ்ரார், நெல்லியடி வட்டம், நல்லூர் கிங்டம், திருநெல்வேலி வட்டம், மல்லாவி ஆகிய லயன்ஸ் கழகங்கள் பங்குபற்ற உள்ளன.

பங்குபற்றுகின்ற அனைத்துக் கழகங்களாலும் வாழ்வகத்துக்கு பெறுமதிமிக்க பொருள்கள் சேவைத்திட்டமாக வழங்கப்பட உள்ளன.

# ஆசிரிய கலாசாலையில் தைப் பொங்கல் விழா

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பொங்கல் விழா நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணிக்கு கலாசாலை முற்றத்தில் கலாசாலை நுண்கலை மற்ற ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க பெருந் தலைவருமாகிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர். பொங்கல் செயற்பாடும் அதற்கான விளக்கங்களும் என்ற பொருளில் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் செயன்முறை ரீதியாக ஆசிரிய மாணவர்களுக்கு விளக்கவுரை வழங்குவார். இதேவேளை கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணிக்கு பொங்கல் வழிபாடு நடைபெறும் என்றும் அதிபர் அறிவித்துள்ளார்.

# நாட்டில் கோதுமைமாவின் மொத்த விலை குறைப்பு!

*கோதுமைமாவின்மொத்தவிலைகுறைக்கப்பட்டுள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

*இதற்கமைய, 220 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கோதுமை மா 200 முதல் 195 ரூபா வரை விற்பனை செய்யப்படவுள்ளது.*

# தெல்லிப்பழை பிரதேசத்தில் பொங்கல் பொதி வழங்கல்!

தெல்லிப்பழை பிரதேசத்தில் துர்க்காபுரம், தந்தைசெல்வாபுரம் பகுதிகளில் உள்ள 25 குடும்பங்களுக்கு வடக்குகிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் 'பகிர்ந்து உண்போம்' திட்டத்தின் கீழ் பொங்கல் பொதிகள், பானை என்பன இன்று (சனிக்கிழமை) வழங்கி வைக்கப்பட்டன.

இந்த பொங்கல் பொதிகளை வலி.வடக்கு பிரதேசசபையின் வட்டாரம் –13 ஐ பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் வழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கது.



# மண்டைதீவில் விரைவில் அமைகிறது சர்வதேச விளையாட்டு மைதானம்!

யாழ்ப்பாணம் மண்டைதீவில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் சர்வதேச விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை விரைவில் ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடமாகாண இளைஞர் யுவதிகளுக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை ஏற்படுத்தும் மாகாணமட்ட கலந்துரையாடல் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் றொான் ரணசிங்க தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் இளைஞர், யுவதிகளை வலுப்படுத்தி விளையாட்டு மற்றும் பொருளாதாரத்தில் ஈடுபடுத்தி ஒருங்கிணைந்த அணுகுமுறையை ஏற்படுத்துவது சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணம் மண்டைதீவில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் சர்வதேச விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை விரைவில் ஆரம்பிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. மைதானத்துக்காக ஏற்கனவே 50 ஏக்கர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன எனவும் எனினும் 100 ஏக்கர் வரை தேவைப்படுவதாகவும் அதனைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஜிம்னாஸ்ட்டிக் ஸ்ரேடியம் அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப் பட்டது. மேலும் மாவடங்கள் தோறும் விளையாட்டு மையங்களை அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் றொான் ரணசிங்க, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேன, யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் , கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் யாழ்.மாவட்ட பிரதம திட்டமிடல் பணிப்பாளர் நிக்களஸ்பிள்ளை மற்றும் வடமாகாண விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரம் சார்ந்த அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்போருக்கு பொங்கல் பொதி!









தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நோயாளர்களை அர்ப்பணிப்பாக – இரவு, பகல் தூக்கமின்றி பராமரிக்கும் பராமரிப்பாளர்களுக்கு கனடாவில் வதியும் திருமதி தமிழ்ச்செல்வி அவர்களின் அனுசரணையில் நோயாளர்களைப் பராமரிக்கும் 30 தொண்டர்களுக்கு பொங்கல் பானைகள், பொங்கல் பொதிகள் என்பன நேற்று (வெள்ளிக்கிழமை) வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் றெமாள்ஸ், வலி.தெற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமாகிய லயன் சி.ஹரிகரன், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் பா.மரியதாஸ தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நிர்வாகசபை உறுப்பினர் லயன் க.தினேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தமிழ்த் தேசிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் இன்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலுக்குப் பின்னர் 5 தமிழ்க் கட்சிகளும் பிற்பகல் 12.20 மணியளவில் புதிய கூட்டணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

ரெலோ சார்பாக அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும், புளொட் சார்பில் அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் அதன் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரனும், தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் அதன் தலைவர் ந.சிறிகாந்தாவும், ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பில் அதன் தலைவர் சிவநாதன் நவீந்திராவும் (வேந்தன்) இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தம்மைப் பிரகடனப்படுத்தியுள்ள இந்தப் புதிய கூட்டணி எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 'ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி' எனும் பெயரில் 'குத்துவிளக்கு' சின்னத்தில் போட்டியிடவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

5 தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றாக இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணியாக, எமது இனத்துக்கான பலம் பொருந்திய கட்டமைப்பாக தோற்றம் பெற வேண்டும் என்ற கோரிக்கையை மறுதலித்தும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சி-யாக உருவாக்குவதற்கு மறுப்புத் தெரிவித்தும் தானாகவே அதிலிருந்து வெளியேறியதால் மேற்கண்ட 5 கட்சிகள் தமிழ் மக்களின் நலன்களையும் நம்பிக்கையையும் காப்பாற்றும் பொருட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக எம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளோம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இருதரப்பு அரசுகளும் ஏற்றுக்கொண்ட தமிழ் மக்களின் வரலாற்றுபூர்வ வாழ்விடமான இணைந்த வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தில் தமிழ் மக்களின் இறையாண்மையின் அடிப்படையிலும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் இலங்கையில் தமிழ் மக்கள் சமத்துவமாக வாழ்வதை உறுதி செய்யும் வகையில், ஒற்றையாட்சி முறையை நிராகரித்து சமஷ்டி அடிப்படையிலான பூரண பொறுப்பு வாய்ந்த சுயாட்சியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு பல்வேறுபட்ட அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் மேற்கண்ட அரசியல் அமைப்புகள் தமது நோக்கங்களை வெற்றிகொள்ளும் பொருட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்தி இயங்குவது என்று 5 தமிழ்க் கட்சிகளும் தீர்மானித்துள்ளன. மேலும் இலங்கைத் தீவில் எமது மரபுவழித் தாயகத்துக்கு வெளியே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களின் சட்ட பூர்வமானதும், ஜனநாயக ரீதியிலானதுமான சகல உரிமைகளை நிலை நாட்டுவதையும் பேணிப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்தக் கூட்டமைப்பு செயற்படும்.

தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கி வரும் பல்வேறு கட்சிகள் 2001ஆம் ஆண்டிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்டு வருகின்ற போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்டமைக்கப்பட்ட அரசியல் நிறுவனமாக இல்லாமையினால், மேற்கூறிய கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்டமைக்கப்பட்ட வலுவான அரசியல் சக்தியாக உருவாக்குவதற்குத் தீர்மானித்துள்ளன.

மேற்கூறிய அரசியல் கட்சிகளுக்கிடையில் எட்டப்பட்டிருக்கும் கருத்தொற்றுமையின் பிரகாரம், பின்வரும் விடயங்கள் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்படு கின்றன.

1. மேற்கூறிய அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் ஒற்றுமையாகவும் கூட்டாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படும்.

2. மேற்கண்ட கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகளை உள்ளடக்கிய தேசிய செயற்குழு ஒன்று அமைக்கப்படும்.

3. இத்தேசியச் செயற்குழு, வடக்கு - கிழக்கு தமிழ் மக்களிற்கான முழுமையான அரசியல் தீர்வை நோக்கமாகக் கொண்டு, அதனை அடைவதற்கான அனைத்து வழிகாட்டல்களையும் நெறி முறைகளையும் வகுத்துச் செயற்படும்.

4. செயற்குழுவிலும் செயற்குழுவால் அமைக்கப்படும் ஏனைய குழுக்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங் கத்துவக் கட்சிகளுக்கு சம உரிமைகளும் சம அளவான பிரதிநிதித்துவமும் வழங்கப்படும்.

5. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்குழுவின் ஏகமனதான முடிவுகளுக்கும் தவறும் பட்சத்தில் அதன் பெரும்பான்மை முடிவுகளுக்கும் அங்கத் துவக் கட்சிகள் கட்டுப்படும்.

6. மேற்கண்ட கட்சிகளையும் தேவையேற்படின் ஏனைய கட்சிகளையும் உள்ளடக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பரந்துபட்ட வலுவான கட்டமைப்பாக உருவாக்க சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

7. தேர்தல் விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரிலும் அதன் சின்னமான குத்துவிளக்கையும் கொண்டு செயற்படும்.

8. இதற்கான நிரந்தர ஒரு கட்டமைப்பை சாத்தியமான விரைவில் உருவாக்கும்வரை இதில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒவ்வொன்றிலிருந்தும் கட்சித் தலைவர்கள் உட்பட தலா மூவரைக்கொண்ட தேசிய செயற்குழு ஒன்று நிறுவப்படும்.

9. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற நடவடிக்கைகளையும் இந்தச் செயற்குழுவே வழிநடத்தும்.

10. தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவாகளைக் கையாள்வதற்கும், ஆலோசனை களைப் பெற்றுக்கொள்வதற்கும் ஏனைய பிற பிரச்சினைகளைக் கையாள்வதற்கும் தேவையான நிபுணர் குழுக்களையும் ஏனைய உப செயற்குழுக்களையும் தேவைகருதி தேசிய செயற்குழு நியமித்துக் கொள்ளும்.

11. அங்கத்துவக் கட்சிகள் கூட்டமைப்பில் இணைந்து செயற் பட்டாலும் தத்தமது சுயாதீனத் தன்மையையும் தனித்துவத்தையும் பேணிக்கொள்ள உரித்துடையவை.

12. ஒவ்வொரு கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தலைமை அமைப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், அங்கத்துவக் கட்சிகளையோ அல்லது கூட்டமைப் பின் கொள்கை, வேலைத்திட்டங்களை ஊடகங்களிலோ பொதுமேடைகளிலோ அல்லது சம்பந்தமில்லா தரப்பினரிடமோ அல்லது சமூக வலைத்தளங்களிலோ கருத்திடுவது தவிர்க்கப்பட வேண்டும். இவை தொடர்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடு களையும் கண்காணிக்க ஒழுக்காற்றுக் குழு நிறுவப்படும்.

13. ஒரு கட்சியின் நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி, உறுப்பினர்கள் மற்றொரு கட்சிக்குத் தாவினால் அதனை அங்கத்துவக் கட்சிகள் ஏற்கக்கூடாது.

14. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவமானது கூட்டுத் தலைமைத்துவமாகவும் சுழற்சி முறையிலான தலைமைத்துவமாகவும் அமையும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான முழு மையான யாப்பு உருவாகின்றபோது, இந்த விடயங்கள் ஆழமாகப் பரிசீலிக்கப் பட்டு உள்ளடக்கப்படும் - என்றுள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.01.2023 இல் வெளியிடப்பெற்றது.